# யா / உடுவில் மான்ஸ்
# தமிழ்க் கலவன் பாடசாலை

## பரிசளிப்பு விழா – 2017

## அதிபர் அறிக்கை

26.09.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ உடுவில் மான்ஸ் த. க. பாடசாலை தொடர்பான

## அடிப்படைத் தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | பாடசாலையின் ஆரம்பம் | :- | 1872 |
| 02. | ஸ்தாபகர் | :- | சுப்பிரமணியம் இளையதம்பி |
| 03. | மாகாணம் | :- | வட மாகாணம் |
| 04. | வலயம் | :- | வலிகாமம் கல்வி வலயம் |
| 05. | கோட்டம் | :- | உடுவில் கல்விக் கோட்டம் |
| 06. | பாடசாலை முகவரி | :- | பிரதேச செயலகவீதி, சுன்னாகம் |
| 07. | பாடசாலை குறியீட்டு (ID) இலக்கம் | :- | 1010027 |
| 08. | தொகை மதிப்பீட்டு இலக்கம் | :- | 09214 |
| 09. | பாடசாலை பரீட்சை இலக்கம் | :- | 11377 |
| 10. | கிராம அலுவலர் பிரிவு | :- | சுன்னாகம் |
| 11. | பிரதேச செயலாளர் பிரிவு | :- | வலிகாமம் தெற்கு |
| 12. | தேர்தல் தொகுதி | :- | மானிப்பாய் |
| 13. | வகுப்புக்களின் பரம்பல் | :- | 1 - 5 |
| 14. | பிரதான தொகுதி | :- | தமிழ் |
| 15. | பால்வகை | :- | கலவன் |
| 16. | பாடசாலை வகை | :- | III |
| 17. | சம்பளக் கணக்கு இலக்கம் | :- | 7471245 |
| 18. | பாடசாலை அபிவிருத்தி கணக்கு இலக்கம் | :- | 109-1001-4-0065069 |
| 19. | காணியின் அளவு | :- | 3 பரப்பு 14 குழி |
| 20. | வசதிக்கட்டணக் கணக்கு | :- | 75900321 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை

## பரிசளிப்பு விழா - 2017

| | | |
|---|---|---|
| காலம் | : | 2017.09.26 (செவ்வாய்) பி.ப1.30மணி |
| இடம் | : | பாடசாலை மண்டபம் |
| தலைமை | : | திரு. இரா. ஜெயக்குமார் (அதிபர்) |
| ஆசியுரை | : | சிவசிறி தி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் (சுன்னாகம் சிவபூதராயர் தேவஸ்தானம்) |
| | | அருட்திரு. தே. தேவநேசன் |
| பிரதம விருந்தினர் | : | திரு. ஆ. இரவீந்திரன் ) (தலைவர், வாழ்வகம், சுன்னாகம்) |
| சிறப்பு விருந்தினர் | : | திரு. T. மாதவன் (கோட்ட கல்வி அலுவலர், உடுவில்) |
| | | திரு. K. கனகேஸ்வரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்) |
| கௌரவ விருந்தினர் | : | திரு. சு. சண்முககுலகுமாரன் (ஓய்வு நிலை கோட்ட கல்வி அலுவலர்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் தூரநோக்கு (VISION)

கிடைக்கக் கூடிய வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி, தரமான கல்வியை வழங்குவதன் ஊடாக, உயர்ந்த அறிவும், சிறந்த ஒழுக்கமும் கொண்ட மாணவ சமூகத்தை உருவாக்கல்

## பாடசாலையின் பணிக்கூற்று (MISSION)

பிரதேசக் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, உயர் சிந்தனையும். ஆழமான அறிவும் நிலைபெறக் கூடிய கல்வியைப் பெற்றுக் கொள்ள, சாத்தியமான அனைத்து நுட்பங்களையும் பயன்படுத்துவதும், தரமான கல்வியினூடாக, ஆழ்மான அறிவும் தலைமைத்துவப் பண்பும் கொண்ட, மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்பி, சமூகத்தின் மேன்மையை அடைய நடவடிக்கையெடுத்தல்.

### மகுட வாசகம்

"கல்வி ஊற்றே மனிதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2017

## உத்தேச நேர - நிகழ்ச்சி நிரல்

| நேரம் | நிகழ்வு | நிகழ்த்துபவர் |
|---|---|---|
| பி.ப 1.30 | விருந்தினர் கௌரவிப்பு | மாணவர்கள் |
| பி.ப 1.35 | மங்கல விளக்கேற்றல் | மதகுருமார், விருந்தினர், அதிபர், பெற்றோர் |
| பி.ப 1.40 | தேவாரம்<br>கிறிஸ்தவ கீதம் | மாணவர்கள் |
| பி.ப 1.45 | தேசியக் கொடி ஏற்றல்<br>தேசிய கீதம் இசைத்தல் | பிரதமவிருந்தினர்<br>இசைத்தட்டு |
| பி.ப 1.50 | பாடசாலைக் கொடி ஏற்றல்<br>பாடசாலைக் கீதம் இசைத்தல் | அதிபர்<br>மாணவர்கள் |
| பி.ப 1.55 | வரவேற்புரை | மாணவர் |
| பி.ப 2.00<br>பி.ப 2.07 | ஆசியுரை | 1. சிவசிறி தி. கிருஷ்ண மூர்த்திக் குருக்கள் (சுன்னாகம் சிவபூதராயர் தேவஸ்தானம்)<br>2. அருட்திரு. தே. தேவநேசன் |
| பி.ப 2.14 | அதிபர் அறிக்கை | அதிபர் |
| பி.ப 2.30 | கௌரவ விருந்தினர் உரை | திரு. சு. சண்முககுலகுமாரன் |
| பி.ப 2.38 | சிறப்பு விருந்தினர் உரை | திரு. T. மாதவன் |
| பி.ப 2.46 | | திரு. K. கனகேஸ்வரன் |
| பி.ப 2.54 | பிரதம விருந்தினர் உரை | திரு. ஆ. இரவீந்திரன் |
| பி.ப 3.08 | பரிசில் வழங்கல் | விருந்தினர் |
| பி.ப 3.20 | நன்றியுரை | திருமதி க. சிறீசுதாகரன் (ஆசிரியை) |
| பி.ப 3.25 | கலைநிகழ்வுகள் | மாணவர்கள் |
| பி.ப 3.40 | கொடியிறக்கல் | பிரதம விருந்தினர் அதிபர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

யா/ உடுவில் மான்ஸ் த.க பாடசாலையின் 2017 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்புவிழாவில் கலந்து கொண்டு, ஆசியுரை வழங்கி, அமர்ந்திருக்கும் சிவபூதராயர் தேவஸ்தான சிவஸ்ரீ.தி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் அவர்களே!

அருட் திரு.தே.தேவநேசன் அவர்களே!

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு இவ்விழாவினை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சுன்னாகம் 'வாழ்வகம்' நிறுவனத்தின் தலைவரும், யாழ்தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமாகிய ஆறுமுகம் இரவீந்திரன் அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருக்கின்ற, உடுவில் கல்விக்கோட்டத்தின் கோட்டக்கல்வி அலுவலர் திரு.T.மாதவன் அவர்களே! வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாரக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் திரு.க.கனகேஸ்வரன் அவர்களே! கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஓய்வு பெற்றவரும், செயல்திறன் மிக்கவருமாகிய முன்னாள் கோட்டக் கல்வி அலுவலர் திரு.ச.சண்முக குலகுமார் அவர்களே!

மற்றும் அயல் பாடசாலைகளின் அதிபர்களே! ஆசிரியர்களே! ஆசிரிய ஆலோசகர்களே! பெற்றோர்களே! பழையமாணவர்களே! நலன்விரும்பிகளே! உங்கள் அனைவருக்கும் எனது இந்நேர வணக்கங்கள் உரித்தாகட்டும்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இன்னொளி பரப்பிக் கொண்டிருக்கும் வாழ்வகம் நிறுவனத்தலைவர் திரு.ஆ.இரவீந்திரன் அகவிழியால் ஆளுமை பெற்று, வாழ்வகம் என்னும் விளை நிலத்தில் மாணவ முத்துக்களைபட்டை தீட்டி வருபவர். வாழ்விற்கு வழிகாட்டி வருபவர். இன்றைய சமூகத்திற்கு முன்மாதிரியாகத் திகழுபவர். இந்த வகையில் இவரது வருகை எமது கலைக்கோயிலுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புவிருந்தினர்களுள் ஒருவராகிய திரு.T.மாதவன் எமது சக அதிபராக இருந்து, கோட்டக்கல்வி அலுவலராகப் பதவி உயர்வு பெற்றவர். பதவியேற்றபின், முதன் முதலாக எமது பாடசாலையினையே தரிசித்தவர். எச்சமயத்திலும் பொறுமையிழக்காது, பொறுப்புக்களை நிறைவேற்றுபவர். இந்த வகையில், இவரது வருகை கிடைக்க மாதவம் செய்துள்ளதாகவே கருதுகிறோம்.

சிறப்பு விருந்தினர்களுள் இன்னொருவராகியதிரு.க.கனகேஸ்வரன் அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர். இவர் முறைசாராக் கல்விக்குப் பொறுப்பாக இருந்தாலும், முறையான வாழ்வினை வாழ்ந்து வருபவர். கனகம் என்றால் பொன். இவரும் பொன்மனம் கொண்டவர். ஏற்கனவே ஒரேயொரு தடவை இங்கு வந்தார். வெறுங்கையுடன் அல்ல! ரூபா முப்பதாயிரம் பணத்துடன். இவரது வழிகாட்டலில், துன்னாலை மைந்தனும் லண்டனில் வாழும் நலன் விரும்பியுமாகிய திரு.சுப்பிரமணியம் சுப்பிரமணிய சிவா இவருடன் வந்து இப்பணத்தை வழங்கினார். இப்பணத்தில் இப்பாடசாலை அடைந்த வரப்பிரசாதங்களை இவ்வறிக்கையின் பிற்பகுதியில் அனைவரும் வாசிக்கலாம்.

கௌரவ விருந்தினராக கம்பீரமாக அமர்ந்திரப்பவர் உடுவில் கோட்டத்தின் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அலுவலர் திரு.சு.சண்முககுல குமாரன் அவர்கள். இவரது மனமும் வெண்மையானது. இல்லறத்தில் விளைந்த இரட்டையரில், இருவல்லவரில் ஒருவரான இவர் என்றும் இளமையானவர். காலச்சக்கரத்துடன் பொருந்தி இன்றும் உழைப்பவர். இவரது முயற்சியினால் எமக்கு ஒரு நிறுவனத்திடமிருந்து கணனிமேசை, சுழல்கதிரை - 01, மற்றும் இரு கதிரைகள் எமது பாடசாலைக்கு கிடைத்தன. இந்த வகையில் இவரது வருகையும் எமக்கு மகிழ்ச்சி தருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலை

யா/உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை சுப்பிரமணியம் இளையதம்பி என்பவரால் 1872ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. பின் சாமுவேல் அப்புக்குட்டி மான் என்பவராலும், அவரது மனைவியாராலும் ஆங்கிலக் கல்விக்கு வழிகாட்டியாக மாற்றம் பெற்றது. ஆரம்பகாலத்தில் பரப்பு 1 குழி 14.3 அளவு கொண்ட காணியில் உருவாக்கப்பட்டது. பின்னர் 2002ஆம் ஆண்டு பழையமாணவர் சங்க உதவியுடன் நிலப்பரப்பு 1குழி 14 வாங்கப்பட்டது. இப்பாடசாலையின் முன் முற்றம் விரிவாக்கப்பட்டது. இது முன்னைய அதிபர் திரு.ஐ.விஜயகாந்தன் அவர்களின் அரும்பணியாகும். நான் இப்பாடசாலையின் அதிபராக 2014.02.03 அன்று பொறுப்பேற்றேன்.

## ஆசிரியர் குழாம்

இப்பாடசாலையில் தற்போது அதிபரைவிட நான்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் உள்ளனர். ஒரு ஆங்கில ஆசிரியர் அவரது தேவைகருதி இங்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர்களை விட வாரத்தில் இரு நாட்கள் ஆங்கில ஆசிரியராக திருமதி.து.சிறீதரன் கடமையாற்றுகிறார். தரம் 2 வகுப்பாசிரியராகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு.S.J.நிக்கலஸ்றொசான் 2017.06.21 ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்று துணுக்காய் கல்வி வலயத்தில் பதவியேற்றுள்ளார். இதனால் 2017.06.21 ஆம் திகதி முதல் தரம் 2இல் உள்ள 15 மாணவர்களுக்கு வகுப்பாசிரியர் இல்லாத நிலைமை உள்ளமை எமது பாடசாலை தற்போது முகம் கொடுக்கும் பிரதான சவாலாகும்.

## மாணவர்கள்

இப்பாடசாலையில் தற்போது 46 மாணவர்கள் பயிலுகின்றனர். இவர்களில் ஆண்கள் 25 பேர். பெண்கள் 21 பேர். சமய ரீதியாக நோக்கும் போது சைவசமயத்தவர்கள் 31 பேர். கத்தோலிக்க சமயத்தவர் 09 பேர் கத்தோலிக்கமல்லாதவர்கள் 06 பேர். இவ்வாண்டும் தரம் 1 இல் 14 மாணவர்கள் இணைந்து கொண்டமை எமது ஆசிரியர்களின் உழைப்பிற்குக் கிடைத்த வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோர் பங்களிப்பு

எமது மாணவர்களின் பெற்றோர்கள் பெரும்பாலும் கூலிவேலைகளில் ஈடுபடுபவர்கள். அநேகமான தாய்மார்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டவர்கள். பெற்றோர் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தருபவர்கள். ஆனால் அப்பாமார் பலருக்கும் அம்மாமார் ஒரு சிலருக்கும் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையில்லை. கூட்டங்களிற்கு வருவதற்கும் இவர்களுக்கு நேரமில்லை. ஏன்? இன்றைய விழாவிற்கு எத்தனை அப்பாமார் வந்துள்ளனர் என்று பாருங்கள். தமது பிள்ளைகள் பரிசு பெறுவதைப் பார்ப்பதற்குக் கூட அவர்களுக்கு மனமில்லை. அதனால் நேரமில்லை. பணம் ஒன்றே அவர்களின் குறி. இது கவலைப்பட வேண்டிய விடயமாகும்.

இதே வேளையில் இலவச மதிய உணவுத்திட்டத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்துவதற்கு பெற்றோர் சமையல் தொண்டரை ஒழுங்கு செய்து தருகின்றமை பாராட்டத்தக்கதாகும். பாடசாலையின் சிரமதானப்பணிகளில், மனம் உவந்து ஈடுபடும் பெற்றோர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். தரம் 5 இல், இப்பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் பெற்றோர்கள், வருடந்தேறும் இப்பாடசாலைக்கு பிளாஸ்ரிக் கதிரைகளை வழங்கி வருகின்றமையும் குறிப்பிட வேண்டியதாகும்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

2016ஆம் ஆண்டு பரீட்சை எழுதிய 10 மாணவர்களில் 5 மாணவர்கள் 100 புள்ளிகள் பெற்றனர். 8 மாணவர்கள் 70 புள்ளிகள் பெற்றனர். இவ்வகையில் 80% ஆன மானவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். ஆகக்கூடிய புள்ளியாக செல்வன் கண்ணன் கிருசாந் 151 புள்ளிகளைப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கவிடயமாகும். இவ்வாண்டு 6 மாணவர்கள் தரம் 5 புலமைபரிசில் பரீட்சை, எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச மதிய உணவு விநியோகம்.

இலவச மதிய உணவிற்குப் பொறுப்பாக ஆசிரியர்கள் திருமதி.அ.உதயகுமாரன், திருமதி.க.சிறீசுதாகரன், திரு.இ.பகீரதன் ஆகியோர் செயற்பட்டுவருகின்றனர். இலவசமதிய உணவு ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் பங்களிப்புடன் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. சமையல் தொண்டராக தற்போது திருமதி.சந்திரவதனா கிருபாநிதி பணியாற்றிவருகிறார். பாடசாலைக்கான சிறிய தோட்டம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என்பது எமது கனவாகும். அதற்கு எமது மாணவர்களின் அப்பாமார்களின் ஒத்துழைப்பினை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

## மாணவர் மன்றங்கள்

மாணவர் மன்றங்களான தமிழ்மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம், ஆங்கில மன்றம், சுற்றாடல் மன்றம் என்பன சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் பி.ப 12.00 மணிக்கு சுழற்சி முறையில் இம் மன்றங்கள் நடைபெறுகின்றன.

## சங்கங்கள்

பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு என்பன சிறப்பாக செயற்பட்டு வருகின்றன பாடசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளராக திருமதி.யோ.மெரினா அவரது பெரும் வேலைப்பளுவுக்கு மத்தியிலும் செயற்பட்டுவருகிறார். பொருளாளராக ஆசிரியை திருமதி.சு.உதயகுமாரன் சிறப்பாக செயற்பட்டு வருகிறார்.

## மாணவர்

சுன்னாகம் மக்கள் வங்கி கிளையினர் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருகின்றனர். சேமிப்பு பணத்தைப்பெற்று பதிவு செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிப்புப்பரிசுகளை வழங்கி வருகின்றனர். எனினும் பெற்றோர் பலர் தம்பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய அக்கறையின்றி உள்ளனர். மாணவர் சிலரே தொடர்ந்து சேமித்து வருகின்றனர். இது சமூக ஆர்வலர்களுக்கு கவலைதரக்கூடிய விடயமாகும்.

## கல்விச் சுற்றுலாவும் கண்காட்சியும்

இப்பாடசாலையின் கல்விச் சுற்றுலா 2017.06.09 அன்று மேற்கொள்ளப்பட்டது. இச்சுற்றுலாவில் வடமாராட்சிப் பகுதியில் உள்ள கெற்பேலி நிலக்குகை, செல்வச்சந்நிதி, பருத்தித்துறை கடற்கரை, வெளிச்சவீடு, ஐஸ்தொழிற்சாலை, வல்லிபுர ஆலயம், நாகர்கோயில், நிலாவரை என்பன பார்வையிடப்பட்டன. இச் சுற்றுலாவில் பெற்றோர்கள் (தாய்மார்) பெருமளவில் கலந்துகொண்டனர். 2017.09.19 அன்று திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமான வடமாகாண விவசாயக் கண்காட்சிக்கு மாணவர், பெற்றோர் அழைத்துச்செல்லப்பட்டனர்.

## பௌதிக வளமேம்பாடு

## பழைய மாணவர் பங்களிப்பு

வலிகாமம் கல்வி வலய முறைசாரக் கல்வியில் பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.க.கனகேஸ்வரன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஜேர்மனி லண்டன் வாழ் நலன்விரும்பியான திரு.அ.சுப்பிரமணிய சிவா அவர்களால் ரூபா 30,000/= எமது பாடசாலை அபிவிருத்திக் கணக்கில் 2015.07.28 அன்று வைப்பிலிடப்பட்டது. இந் நிதியில்

01. மாணவர் பிரார்த்தனைக்கான பெரியபாய், மதிய உணவுக்கான பந்திப்பாய் - 02 என்பன கொள்வனவு செய்யப்பட்டன.
02. 02 பெட்டி தேநீர் கோப்பைகள், வெள்ளிச்செம்பு - 01, பிளாஸ்ரிக் வாளிகள் - 02, ரம்ளர் - 50, துருவுபலகை, கோப்புதாங்கிகள் (File holder) சிறிய வெண்பலகை - 01, திரைச்சீலை என்பன கொள்வனவு செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. அதிபர் மேசைக்கு கண்ணாடி இணைப்பு செய்யப்பட்டது.

04. பாடசாலைத் தோட்டத்திற்கு இரு சுழல் பம்பிகள் இணைக்கப்பட்டன.

05. அலுவலகத்தினுள் எலிகளின் தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக 12 துவாரங்களுக்கும் கண்ணாடிகள் பதிக்கப்பட்டன.

**இப்பணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைகள்.**

01. தரம் 1 இற்கான காட்சிப்பலகை அமைத்தல்

02. அலுவலக மேசைகளின் அலுமாரிகள் திருத்தப்படுதல்

03. பாடசாலைக்கு வெப்தளம் அமைத்தல்

## நாடாளுமன்ற உறுப்பினரினால் நிழற்பிரதியந்திரம் வழங்கப்பட்டமை

யாழ்மாவட்ட உறுப்பினர் திரு.த.சித்தார்த்தன் அவர்களின் 2016ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நீதி ஒதுக்கிடு ரூபா 1 லட்சத்தின் கீழ் வலி தெற்கு பிரதேச செயலகத்தினால் எமது பாடசாலைக்கு ரொஷிபா நிழற்பிரதியந்திரம் 2017.08.08 அன்று வழங்கப்பட்டது. இது ஆசிரியர்களின் கற்பித்தல் பணிக்கு கிடைத்த உன்னதமான வரப்பிரசாதமாகும். இதற்காக பாடசாலைச் சமூகம் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.த.சித்தார்த்தன் அவர்களுக்கு நன்றி கூறுகிறது.

## பழைய மாணவனின் பரிசளிப்புவிழாவுக்கான அனுசரணை

இப் பாடசாலையின் பழைய மாணவனும், லண்டனில் வசிப்பவருமான திரு.அப்பையா ஜெயரட்ணம் இப்பரிசளிப்புவிழாவிற்காக ரூபா 21,000/= இனை வழங்கியுள்ளார். மேலும் மலசலகூட சுத்திகரிப்பிற்கான நிதியை வழங்குவதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப்போட்டி

இப்பாடசாலையின் வருடநந்த விளையாட்டுப்போட்டி அன்று நடைபெற்றது. இவ் வலயத்தில் பிரதமவிருந்தினராக வடமகாகாண சபையின் உறுப்பினர் (தற்போது மாகாண கல்வி அமைச்சர்) கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக வலி தெற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திரு.சந்திவேல், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலொசகர் திரு.ந.புவன்சிறிந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சமயவிழாக்கள்

இப்பாடசாலையில் பொங்கல்விழா, நவராத்திரிவிழா, கிறிஸ்மஸ் விழா என்பன சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

## எமது பாடசாலை
## பலங்கள்

01. பிரதான வீதியை அண்மித்த நகரப்பகுதியில் அமைந்திருத்தல்
02. பாடசாலையினை அண்மித்து பிரதேச செயலகங்கள், பொதுநூலகம், வங்கிகள், சந்தை, வலய கல்வி பணிமனை என்பன அமைந்திருத்தல்
03. சமய ரீதியாக பன்முகத்தன்மை காணப்படல்.
04. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவீனங்கள்

01. பெற்றோரில் சிலர் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையற்று இருத்தல்.
02. பெரும்பாலான தந்தைமார் பாடசாலைக்கு வருகை தராதவர்களாக இருத்தல்
03. பழைய மாணவர்களில் பெரும்பாலானவர்கள் இப்பாடசாலையில் அக்கறையற்று இருத்தல்
04. தூரநோக்கற்ற முறையில் அமைந்துள்ள கட்டிடத் தொகுதி
05. மூடிய வகுப்பறைகள் இல்லாமை.

## வாய்ப்புக்கள்

01. பாடசாலையின் சூழலில் பலமுன்பள்ளிகள் காணப்படுதல்
02. ஆசிரியர்கள் விரும்பக்கூடிய போக்குவரத்துவசதி மிகுந்த இடத்தில் பாடசாலை அமைந்திருத்தல்
03. பௌதிக வளங்கள் பெறக்கூடிய சூழல்

## அச்சுறுத்தல்கள்

01. அதிகரிக்கும் மாணவர்களுக்கு ஏற்ற இடவசதி இன்மை
02. பாடசாலைக்கு இரவுக் காவலாளி இல்லாத நிலைமை
03. மாணவரில் பெரும்பாலானோர் இரயில்பாதை, கே.கே.எஸ் வீதி என்பவற்றை கடந்துவரவேண்டிய நிலைமை மஞ்சள் கேட்டுக் கடவையில் போக்குவரத்து பொலிசாரின் ஒழுங்கான கண்காணிப்பு சீராக இன்மை
04. பாடசாலைகள் நெருக்கமாக அமைந்திருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தேவைகள்

01. பிரிக்கப்பட்ட முறையான வகுப்பறைகள்
02. முறையான நூலகம்,
03. முறையான கணனி அறையும் கணனியும்
04. வெப்தாளம் அமைத்தல்
05. பாடசாலைத்தோட்டம், மூலிகைத் தோட்டம்
06. இரவுக் காவலாளி

## எமது நன்றிகள்

01. பரிசளிப்புவிழா அனுசரணையாக ரூபா 21,000/= நன்கொட வழங்கிய லண்டன் வாழ் பழையமாணவர் திரு.அ.ஜெயரட்ணம் அவர்களுக்கு...
02. பாடசாலையின் பௌதிக வள மேம்பாட்டுக்கு ரூபா 30,000/= அன்பளிப்பு வழங்கிய துன்னாலையில் வாழும் (தற்போது ஜேர்மனி) நலன்விரும்பி திரு.சு.சுப்பிரமணியசிவா அவர்களுக்கு..
03. பாடசாலைக்கு பன்முகநிதி ஒதுக்கீட்டின் கீழ் ரொஷிபா நிழற்பிரதியந்திரம் வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு...
04. விசேட உணவுகளை மாணவர்களுக்கு வழங்கிவரும் நலன் விரும்பிகளுக்கு.....
05. பரிசுப் பொருள்களின் ஒரு தொகுதியை வழங்கிய சுன்னாகம் சித்திவிநாயகர் நிறுவனத்துக்கு.
06. கால்கோள் விழாவிற்கு (தரம் 1) உதவிவரும் குரும்ப சிட்டியைச் சேர்ந்த திரு.தயாபரனுக்கு...

## பாடரீதியாக பரிசில் பெறுபேறுகள் (2017)

தரம் – 01

| | | |
|---|---|---|
| பு. பிரியசா | - | கத்தோலிக்கம், தமிழ்மொழி, சுற்றாடல், |
| க. ரினேஷ் | - | கணிதம், சைவசமயம் |
| ச.ஸ்ரீபன்ராஜ் | - | கிறிஸ்தவம் |
| செ.லக்சிகன் | - | சுற்றாடல் (பொதுத்திறன்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் – 02

| | | |
|---|---|---|
| சி.நிதுஷன் | - | சைவசமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்திறன் |
| த.டிசாந்தர்மிலன் | - | கிறிஸ்தவம் |
| ம. சர்மி | - | தமிழ்மொழி |
| பா.டிலோஜிதன் | - | பொதுத்திறன் |

தரம் – 03

| | | |
|---|---|---|
| ஜெ. கம்ஷனா | - | சைவசமயம் |
| த. ஜொய்ஷி | - | தமிழ்மொழி, கிறிஸ்தவம், சுற்றாடல், ஆங்கிலம் |
| இ. ஜனுஸ்டன் | - | கணிதம் |

தரம் – 04

| | | |
|---|---|---|
| ர. சகானா | - | தமிழ்மொழி, ஆங்கிலம், சைவசமயம் |
| பொ. டெலன்ஸ் | - | கணிதம், சுற்றாடல் |

தரம் – 05

| | | |
|---|---|---|
| க. கிறோஜன் | - | தமிழ்மொழி, சைவசமயம், ஆங்கிலம் |
| க.கிருஷாந் | - | சைவசமயம் |
| பு.ஜனுஷன் | - | சுற்றாடல் |

## மாணவர் வரவொழுங்கு

| | | |
|---|---|---|
| தரம் 1 | - | ஜெ.மதுஷா |
| தரம் 2 | - | ம.சர்மி |
| தரம் 3 | - | ஜெ.கம்ஷனா |
| தரம் 4 | - | ச.பிரசன்னா, கி.சங்கீர்த் |
| தரம் 5 | - | யோ.எஸ்ரோன், ர.கிருத்திகா |

## பாடநூல் பேணல்

| | | |
|---|---|---|
| தரம் 1 | - | ச.லாவண்யா |
| தரம் 2 | - | பொ.டெனிஸ் |
| தரம் 3 | - | ம.விஸ்ணுஜன் |
| தரம் 4 | - | ர.சகானா |
| தரம் 5 | - | றே.ரிஷானி |

## மாணவர் சுத்தம்

| | | |
|---|---|---|
| தரம் 1 | - | ச.லாவண்யா, ர.சுதர்சிகா, பு.பிரியசா |
| தரம் 2 | - | ஜெ.சரஞ்சா |
| தரம் 3 | - | இ.ஜனுஸ்டன் |
| தரம் 4 | - | பொ.யான்சிக்கா |
| தரம் 5 | - | றே.ரிஷானி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 01 இல் பரிசு பெறுவோர் - 2017

01. ப.மதுரங்கன்
02. ஆ.தருண்
03. யே.விதுஷன்
04. ல.துஷான்
05. நி.தனுஸ்
06. தி.திலக்சன்
07. டி.டிஸ்லன்
08. சி.மதுகவின்
09. சி.சியானுஜன்
10. ரா.வேனுஜா
11. கி.அபிஷா
12. தி.ஜினிசியா
13. சு.டக்சிகா
14. இ.யஸ்மினா

## 2016ம் ஆண்டு குடும்பமட்ட கோட்டமட்ட போட்டிகளில் பங்குபற்றியோர் விபரம்

| துரித கணிதம் | குடும்பம் | கோட்டம் |
|---|---|---|
| **தரம் - 02** | | |
| பொ.டெனிஸ் | 2ஆம் இடம் | |
| சி.நிதுஷன் | 3ஆம் இடம் | 2ஆம் இடம் |
| **தரம் - 03** | | |
| இ.ஜனுஸ்டன் | 5ஆம் இடம் | |
| **தரம் - 04** | | |
| பொ.டெலென்ஸ் | 4ஆம் இடம் | |
| **தரம் - 05** | | |
| பு.ஜனுஷன் | 4ஆம் இடம் | |

| சித்திரம் | குடும்பம் | கோட்டம் |
|---|---|---|
| **தரம் - 01** | | |
| பு.பிரியசா | 1ஆம் இடம் | |
| **தரம் - 02** | | |
| ம.சர்மி | 2ஆம் இடம் | 2ஆம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு பேட்டியின் போது



நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்
நிழற்பிரதியந்திரம் வழங்குதல்



கால்கோள்விழா



நடமாடும் நூலகசேவை - 2017





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த அமரர்
## அப்பையா விஜயரட்ணம்

தோற்றம்
1951
4
11



மறைவு
2016
5
29

இவரது ஞாபகார்த்தமாக லண்டனில் வசிக்கும் இவரது சகோதரன் திரு.அப்பையா ஜெயரட்ணம் பரிசளிப்பு விழா அனுசரணையாக ரூபா 21,000.00 வழங்கியமைக்கு நன்றி கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலைக் கீதம்'

வாழிய ! வாழிய ! வாழிய - உடுவில்
மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை

சீலமும் வாய்மையும் சிறந்த நூல் நல் நீதியும்
சாலவும் போற்றி சாத்வீகம் வளர
கல்வி ஊற்றே மனிதம் என்பதால்
காசினி போற்றிட கலை வளர்சாலை - வாழிய

பைந்தமிழ் மொழியுடன் ஆங்கிலமும் வளர
பல்கலை அறிவும் பரந்தே வளர
உன்னதப் பண்புகள் உயர்ந்த இலட்சியங்கள்
ஊட்டியே மானிடம் ஆக்கிடும் சாலை - வாழிய

முத்தமிழ் சிறந்திட முதுநலம் வளர்ந்திட
உடலினில் உள்ளத்தில் உயர்வினில் உறுதி
நற்றவப் பயன்கள் வழங்கிடும் அதிபர்
ஆசான்கள், மாணவர் என்றென்றும் வாழிய - வாழிய

**ஆக்கம் - திருமதி.பா.விஜயகாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org